உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## பேச்சு

## மேற் பிரிவு (தரம்5,6)

## மகாத்மா காந்தி

தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் காந்தியடிகளும் ஒருவராவர்.

இவர் வட இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் போபந்தர் என்னும் கிராமத்தில் பிறந்தார்.

பெற்றோர் இவருக்கு மோனதாஸ் காந்தி என்று பெயரிட்டனர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை உள்ஞ்ரிலேயே பெற்றுக்கொண்டார்.

இவர் தனது இளம்பிராயத்தில் அரிச்சந்திரன் நாடகம், சிரவணன் நாடகம் போன்றவற்றைப் பார்த்து நல்லொழுக்கம் உடையவராக விளங்கினார்.

இப்பிராயத்திலேயே இவருக்கு அக்கால வழக்கப்படி பெற்றோர் கஸ்தூரியை திருமணம் செய்து வைத்தனர்.

மோனதாஸ் காந்தி சட்டக் கல்வி கற்பதற்காக இங்கிலாந்து சென்றார்.

மது அருந்தாதே, பொய் சொல்லாதே என்ற அறிவுரைகளை இவரது தாயார் இவருக்கு சொல்லி வைத்தார்.

மூன்றாண்டுகள் முயன்று கற்று “பாரிஸ்டர்” பட்டம் பெற்று இந்தியாவிற்கு திரும்பி வந்தார்.

காந்தியடிகள் எழுதிய “சத்திய சோதனை” அவரது சுய சரிதையாகும்.